## இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் - 2018

-----------------------------------------------------------------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடனான தொடர்புடன் இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 15 பந்தி பிரகாரம் இருப்புக் கிரயம் மற்றும் தேறிய நிகர பெறுமதிகளில் குறைந்த பெறுமதியிலேயே கணித்தல் வேண்டியபோதிலும், மொத்தம் ரூபா 22,902 ஆன பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத நிலையில் இருந்த இருப்பு மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களில் கிரயப் பெறுமதியில் கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டினுள் இந்த ரூபா 22,902 பெறுமதியுடைய இருப்பு மீதி தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டு குழு பரிந்துரையின்படி அது அகற்றப்பட்டு உரிய சீராக்கங்கள் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்டது. | கணக்குகளை தயாரிக்கும்போது இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்றவாறு செயலாற்ற வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அ) மீளாய்வாண்டு பொருட்டு ஏனைய வருமானங்களின் கீழ் மூலதன நிதியங்கள் குறைவுருவாக ரூபா 52,656,585 கணக்குகளில் பதியப்பட்டிருந்த போதிலும், கணித்தலின்படி அது ரூபா 52,714,458 ஆக இருந்தமையினால் ரூபா 57,873 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. இருப்பினும், இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்கும் வகையில் செயலாற்றுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கணக்குகளை தயாரிக்கும்போது சரியாக கணக்குகளில் பதிவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ஆ) மீளாய்வாண்டினுள் இரு சந்தர்ப்பங்களில் சொத்துக்களை விற்பதன்மூலமும் அகற்றுவதன்மூலமும் எழுந்த மொத்தம் ரூபா 300,723 நட்டம் வருமானக் கூற்றுக்கு மாற்றப்படாமல் பொது ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு பார்த்துக்கொள்ளுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கணக்குகளை தயாரிக்கும்போது சரியாக கணக்குகளில் பதிவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| இ) மீளாய்வாண்டில் சொத்துக்களை விற்பதன்மூலமும் கிடைத்த ரூபா 44,700 தொகை காசுப் பாய்வுக் கூற்றில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு பார்த்துக்கொள்ளுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கணக்குகளை தயாரிக்கும்போது சரியாக கணக்குகளில் பதிவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஈ) காசுப் பாய்வுக் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப் பாய்வினை கணிக்கும்போது முதலீட்டு வேறுபாடு கணிப்பிற்கிணங்க ரூபா 22,660,092 ஆன போதிலும் காசுப் பாய்வுக் கூற்றில் அது ரூபா 22,610,092 ஆக காட்டியமையினால் முதலீட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப் பாய்வு ரூபா 50,000 தொகை கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு பார்த்துக்கொள்ளுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கணக்குகளை தயாரிக்கும்போது சரியாக கணக்குகளில் பதிவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| உ) காசுப் பாய்வுக் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் கடன்படுநர் குறைவு ரூபா 466,352 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும், கணிப்பிற்கிணங்க அது ரூபா 7,513,150 ஆக இருந்தமையினால் செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப் பாய்வு ரூபா 7,046,798 தொகை கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு பார்த்துக்கொள்ளுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கணக்குகளை தயாரிக்கும்போது சரியாக கணக்குகளில் பதிவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ஊ) காசுப் பாய்வுக் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் பல்வேறு கடன்கொடுநர்களின் மாற்றம் ரூபா 13,909,714 மறை காசுப்பாய்வாக காட்டப்பட்டிருந்த போதிலும், கணிப்பிற்கிணங்க அது ரூபா 9,396,202 ஆக இருந்தமையினால் செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப் பாய்வு ரூபா 4,513,512 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு பார்த்துக்கொள்ளுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கணக்குகளை தயாரிக்கும்போது சரியாக கணக்குகளில் பதிவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| எ) மீளாய்வாண்டில் மொத்தம் ரூபா 745,391 ஆன மூலதன தன்மையிலான செலவினங்களை மீண்டுவரும் செலவினங்களாக கணக்குகளில் பதிந்தமையினால் ஆண்டின் குறைவு குறித்த பெறுமதியினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. இது நாளேட்டு இல.72 மூலம் 2019 ஆம் ஆண்டினுள் சரிசெய்யப்பட்டுள்ளது. | கணக்குகளை தயாரிக்கும்போது சரியாக கணக்குகளில் பதிவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| 2015 யூலை 14 ஆம் திகதிய 2015/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| | i. பெற்றுக்கொண்ட முற்பணங்கள் உரிய பணி முடிக்கப்பட்டு 10 நாட்களினுள் தீர்க்கப்பட வேண்டியபோதிலும், 10 முதல் 25 நாட்கள் வரை குறித்த காலவெல்லையை விஞ்சி தீர்க்கப்பட்டிந்தது. | இணங்குகின்றேன். இது பல்கலைக்கழகத்தில் தேங்காய் பறிப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத் தொகையாகும். பறிப்பதற்கு ஏற்ற முதிர்வடைந்த தேங்காய்கள் உள்ளனவா என முன் முடிவு செய்ய முடியாமையினால் பல்கலைக்கழகத்தின் எல்லா தேங்காய் மர எண்ணிக்கையின் அடிப்படையில் முற்பணங்களை பெற்றுக்கொண்ட போதிலும் தீர்க்கப்பட்ட மரங்களில் தேங்காய் பறிக்காமையினால் மேலதிக தொகை மீதமாக உள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| | ii. உரிய பணிக்கு போதியவாறு செலவுமதிப்பீடு செய்யாது ரூபா 7,785 முதல் ரூபா 16,690 வரையான தொகை அதிகமாக முற்பணங்களை பெறுதல் மற்றும் செலவு செய்யாமல் மீதமாகும் தொகையை உரிய திகதிகளிலேயே மீண்டும் வைப்புச் செய்ய வேண்டியபோதிலும், 13 முதல் 35 நாட்கள் வரையிலான காலம் தாமதமாகிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இணங்குகின்றேன். 2918.04.10 ஆம் திகதி இந்த பல்கலைக்கழகமும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியகமும் ஒன்றிணைந்து நடாத்திய முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தின் அங்கீகரித்த தொகை செலவுமதிப்பீட்டின் பிரகாரம் பண முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் பின்னர் விரிவுரைக் கட்டணங்கள் காசோலை மூலம் செலுத்துவதற்கு நிருவாகம் எடுத்த தீர்மானத்தின்படி செயலாற்றியமையினாலும், சிங்கள தமிழ் புதுவருட லீவு மற்றும் மாணவ பிக்குகளின் விரிவுரை வருகை சதவீத ஏடுகளை கணக்கெடுக்கும் நடவடிக்கை இடம்பெற்றமையினாலும் முற்பணத் தொகைளை மீள தீர்த்தல் 05 நாட்களினால் தாமதமடைந்திருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| | iii. முற்பணங்களை வழங்குதல் விசேட பணிக்கு கிட்டிய திகதியில் இடம்பெற வேண்டிய போதிலும், உரிய பணி மேற்கொள்வதற்கு 19 – 25 நாட்களுக்கு முன்னர் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | இணங்குகின்றேன். முற்பணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் தற்போது பல்கலைக்கழக சேவையில் இல்லை என்பதுடன் இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு பார்த்துக்கொள்ளுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவு

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 55,048,393 குறைவு ஏற்பட்டிருந்தவுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் குறைவு ரூபா 48,834,341 ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதிசார் விளைவுகளில் ரூபா 6,214,052 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு சம்பளங்கள் கூலிகள் மற்றும் தேய்மானங்களில் அதிகரிப்பு பிரதான காரணங்களாக விளங்கின.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பற்றிய பகுப்பாய்வு

கடந்த ஆண்டில் பிரதான வருமானங்கள், மீளாய்வாண்டுடன் ஒப்பிடுகையில் புனரமைப்புக்கள், இயலளவு கட்டியெழுப்பல் மற்றும் ஆராய்ச்சிகளும் அபிவிருத்திகளும் என்பன பொருட்டான திறைசேரி நிதியேற்பாடு நூற்றுக்கு 58 ஆல் குறைந்திருந்ததுடன் நானாவித வருமான வகுதி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 57 ஆல் குறைந்திருந்தது.

அத்துடன், பிரதான செலவின வகுதிகளுக்கிடையில் தனியாள் வேதனாதிகள் மற்றும் ஓய்வூதிய நலன்கள் என்பன பொருட்டு செலவிட்ட தொகை நூற்றுக்கு 31 இனாலும், பயிற்சி மற்றும் அபிவிருத்தி பொருட்டு செலவுகள் நூற்றுக்கு 230 இனாலும் அதிகரித்திருந்ததுடன் ஒப்பந்த சேவைகள் பொருட்டான செலவுகளும் நூற்றுக்கு 11 ஆல் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

கடந்த ஆண்டில் நடைமுறைச் சொத்துக்கள் விகிதாசாரம் 1:0.39 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது 1:1.25 ஆக அதிகரித்திருந்தது. அத்துடன், விரைவு சொத்துக்கள் விகிதாசாரமும் முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1: 0.374 முதல் 1: 1.2 வரை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டு சுற்றுலாவுக்கு பங்குபற்றுதல் பொருட்டு சுற்றுலாவுக்கு முன் தேவையான அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காது விமானப்பத்திரங்கள், பதிவுக்கட்டணங்கள், அமய மற்றும் இணைந்த படியாக பல்கலைக்கழகத்தினால் செலவுகள் உறப்பட்டிருந்த போதிலும், சுற்றுலா இரத்தாகியமை காரணமாக பல்கலைக்கழக நிதியத்திற்கு | முதல் 2019.09.26 வரை கனடாவில் நடைபெற்ற பொது நலவாய சபை உபவேந்தர்களின் மாநாடு பொருட்டு இப்பல்கலைக்கழகத்தின் **உயர்பீட தேரர் (*மஹோபாதியன்*)** அவர்கள் கலந்துகொள்வதற்கு அமைச்சின் அங்கீகாரம் பெறுவதற்கு ஏற்புடையதாக 2018.08.16 திகதிய ஆவணங்கள் அனுப்பப்பட்டன. இந்த மாநாட்டில் பதிவதற்கான இறுதித் திகதி 2018.09.08 ஆனபடியால் உரிய அங்கீகாரத்தை எதிர்பார்த்து பதிவு நடவடிக்கைகள், விமானப்பத்திர ஒதுக்கல் மற்றும் லீவுகளை | உரிய அங்கீகாரங்கள் பெறப்பட்டதன் பிற்பாடு மற்றும் உரிய மாநாடு ஒழுங்குபடுத்தும் நிறுவனம் உள்ளது என உறுதிப்படுத்திக் கொண்டதன் பிற்பாடு தேவையான விமானப்பத்திரங் |

| | | |
|---|---|---|
| ரூபா 138,209 நட்டம் ஏற்பட்டிருந்தது. | அங்கீகரித்துக்கொள்ளுதல் பொருட்டு அமைச்சுக்கு அனுப்பப்பட்டன. மேற்படி மாநாட்டில் பங்குபற்றுதல் தற்போது இரத்துச் செய்யப்பட்டமையினால் அமய படி மற்றும் இணைந்த படிகள் திரும்ப செலுத்தப்பட்டதுடன் பல்கலைக்கழகம் உரியவாறு செயலாற்றியமையினால் நட்டத்தை இழிவுபடுத்திக் கொள்ள இயலுமாக இருந்தது. | கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டியமை. |

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தானசாலை மற்றும் மாணவர் கேந்திர நிலையம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 213,385,000 தொகைக்கு ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 1982 இன் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1978 இன் 94 ஆம் இலக்க சட்டத்தின் 8(ஏ) பிரிவின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், விலைகூறல் ஆவணங்களில் ஒப்பந்ததாரரின் தேவைப்பாடுகளுக்கு (Employees Requirements) ஏற்புடையதான 1.5.3 (ஏ) மற்றும் 1.5.6 பந்திகளுக்கு ஏற்றவாறு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட செலவுமதிப்பீட்டினுள் மின் உயர்த்தி ஒன்றை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் உடல்ஊனமுற்ற நபர்களின் தேவைக்காக ஒப்படைக்கக்கூடிய ஆதாரமொன்று உரிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. இருந்த மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியை அடிப்படையாகக் கொண்டு கிடைப்பனவிலுள்ள நிலப் பரப்பளவிலிருந்து உச்சப் பயனை எடுப்பதற்கு ஏற்ற வகையில் நில நிரப்பல் மேற்கொண்டு இத்தகைய தேவைப்பாட்டுக்கு ஏற்ற வகையில் வாகன தரிப்பிடங்கள் நிறுவப்பட்டுள்ளன. | செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் முன்திட்டங்கள் முறைமையாதலும் சுற்றறிக்கைகளுக்கு ஏற்றதாதலும் வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் கல்விசார் உதவியாளர் பணியாற்றொகுதி பதவிகளான **மகோபாத்ய** பதவி, நூலகர் பதவி, பேராசிரியர் 04 பதவிகள் மற்றும் ஆங்கில, பௌத்த ஆலோசகர்கள் 02 பதவிகளும், நிருவாக, கல்விசாரற்ற பணியாற்றொகுதியின் 03 நிருவாக பதவிகளும், எழுதுநர்கள் மற்றும் சமாந்தர தர 03 பதவிகளும் அடங்கலாக மொத்தமாக 21 பதவி வெற்றிடங்கள் மீளாய்வாண்டு இறுதியில் நிலவின. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | உடனடியாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு செயலாற்றுதல் வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005 சனவரி 27 திகதிய PED/27 இலக்கமுடைய அரச தொழில்முயற்சி சுற்றறிக்கை பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2019 ஏப்றல் 30 ஆம் திகதியே கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டன. | கருத்து தெரிவிக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் கணக்காய்வுக்கு கணக்குகளை முன்வைத்தல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு பொருட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு அலகினால் 23 கணக்காய்வு விசாரணைகள் வெளியிடப்பட்டிருந்தெனினும் கணக்காய்வுத் திகதி வரையில் 16 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் கிடைத்திருக்கவில்லை என்பதுடன் குறித்த காலவெல்லை 07 மாதங்கள் முதல் 15 மாதங்கள் வரையிலான காலவீச்சு என்பதனால் பல்கலைக்கழகத்தின் உற்பத்தித்திறனுக்கு உள்ளகக் கணக்காய்வு அலகின் பங்களிப்பினை பெற்றுக்கொண்டிருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டது. மேலும், உள்ளகக் கணக்காய்வு அலகினால் வெளியிடப்படுகின்ற விசாரணைகளின் பிரதிகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சகல உள்ளகக் கணக்காய்வு விசாரணைகள் பொருட்டு இதுவரையில் பதில் அளித்திருப்பதுடன் உரிய விசாரணைகள் பொருட்டு சரிசெய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செயலாற்ற வேண்டியிருப்பதுடன், மீளாய்வாண்டுக்கு ஏற்புடையதாக பல்கலைக்கழகம் தமது விடயப்பரப்புக்கு கீழான பணிகள் தொடர்பில் போதிய கவனஞ் செலுத்தியிருக்கவில்லை. அதற்கிணங்க, மீளாய்வாண்டுக்கு ஏற்புடையதாக தமது செயல் திட்டத்தில் அதற்குரிய செயற்பாடுகள் அடங்கியிருந்தமையையும், வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஆவணத்தில் போதிய நிதியேற்பாடுகள் செய்திருந்தமையையும் இனங்காண முடியவில்லை. | இந்த பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை கருத்திலெடுக்கையில் நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை எய்தும் முகமாக நேரடியாக பங்களிப்பு செய்வதில்லை. இருப்பினும், எதிர்காலத்தில் 2017.08.14 திகதிய එන්.පී/එස්.සී.පී.17 இலக்கமுடைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை அனுசரித்து செயலாற்ற குறித்துக்கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |